# உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வானது மத்திய வங்கியின் விழுமியங்களை உருவாக்கி, பாதுகாத்து, நிலைபெறத்தக்கதாக்குவதற்கு சுயாதீன, இடர்நேர்வு அடிப்படையிலான, மற்றும் குறிக்கோள் உத்தரவாதம், ஆலோசனை, உள்நோக்கு மற்றும் தொலைநோக்கை வழங்குவதுடன் ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளை மதிப்பீடுசெய்து முன்னேற்றுவதற்கான முறைமை மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த அணுகுமுறையொன்றை கொண்டுவருவதன் ஊடாக அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு வங்கிக்கு உதவுகின்றது. இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் மூன்றாம் வரிசையாகத் தொழிற்படுகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுகளுக்கு மதிப்பைச் சேர்த்து, மேம்படுத்துவதற்கான எதிர்காலத்தை நோக்காகக் கொண்ட பரிந்துரைகளை வழங்குகின்றது. முதன்மை உள்ளக கணக்காய்வாளர், உள்ளகக் கணக்காய்வின் தலைவர் மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு ரீதியாக கணக்காய்வுக் குழுவுக்கும் நிர்வாக ரீதியாக ஆளுநருக்கும் அறிக்கையிடுகின்றனர். உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் முக்கியத்துவமானது முதன்மை உள்ளக கணக்காய்வாளரின் நியமனம் மற்றும் பதவிநீக்கத்தை வரையறைசெய்கின்ற மத்திய வங்கிச் சட்டத்தின் 102ஆம் பிரிவில் உரியவாறு அங்கீகாரமளிக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை தொழிற்பாட்டின் ஆளுகை, சுயாதீனத்தன்மை மற்றும் குறிக்கோள்சார் தன்மையை நிலைநிறுத்தி முதன்மை உள்ளக கணக்காய்வாளரினால் தகவல்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலை உறுதிப்படுத்துகின்றது.

மத்திய வங்கிச் சட்டத்தின் 102 (5) ஆம் பிரிவிற்கிணங்கி, முதன்மை உள்ளகக் கணக்காய்வாளரின் வகிபாகங்களுடனும் பொறுப்புக்களுடனும் கூடிய சுயாதீனம், நிறுவனம்சார் நிலைமை, அறிக்கையிடல் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக உள்ளகக் காணக்காய்வின் நோக்கெல்லை, அதிகாரம், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன ஆளும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மத்திய வங்கியின் கணக்காய்வு சாசனத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2025 இல் உள்ளகக் கணக்காய்வானது, 2009 இலிருந்து பின்பற்றப்பட்ட IIஅ தரநிலைகளுடன் இணங்குவதற்காக அதன் நீடித்த அர்ப்பணிப்பினை வலியுறுத்தி உள்ளக கணக்காய்வாளர்களின் நிறுவனத்தின் புதிய உலகளாவிய உள்ளகக் கணக்காய்வு தரநிலைகளைப் பின்பற்றியது.

## கணக்காய்வுகளை நடாத்துதல்

2025ஆம் ஆண்டு காலப்பகுதியில், இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளின் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தி நிறைவேற்றப்பட்டதுடன் கொள்கை, இணங்குவிப்பு, தொழிற்பாட்டுசார்ந்த, தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு, சட்ட மற்றும் ஏனைய தொடர்புடைய இடர்நேர்வுப் பகுதிகளை உள்ளடக்கிய வங்கியின் உபாய ரீதியிலான குறிக்கோள்களை அடைவதற்கான வங்கியின் தொழிற்பாடுகளை முன்னேற்றுவதற்கான கணக்காய்வுப் பரிந்துரைகளை வழங்கியது. மேலும், உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு மற்றும் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு என்பவற்றுக்கிடையிலான இடர்நேர்வு தொடர்பான தகவல்களைப் பகிர்தல் ஆண்டுகாலப்பகுதியில் தொடரப்பட்டது.

## கணக்காய்வு முன்னேற்றத்தை அறிக்கையிடல், மற்றும் கணக்காய்வுப் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைமைகளைப் பின்தொடர்தல்

ஆண்டுகாலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் கணக்காய்வுப் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் என்பன ஆண்டுகாலப்பகுதியில் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்டன. மேலும், கணக்காய்வுக் குழுவின் தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவக் கடிதத்தில் எடுத்துக்காட்டப்பட்ட வெளிவாரி கணக்காய்வாளரின் அவதானங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றமும் கணக்காய்வுக் குழுவுக்கு காலாந்தர ரீதியில் அறிக்கையிடப்பட்டது.

## இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்

வங்கியின் அமைப்புசார்ந்த உபாயங்கள் மற்றும் குறிக்கோள்களுடன் இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் அணிசேர்தலை வலுப்படுத்துவதற்கு இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரிப்பதில் 2024 இல் பயன்படுத்தப்பட்ட பெறுமதிச் சங்கிலி அணுகுமுறையினை உள்ளகக் கணக்காய்வு தொடர்ந்து பயன்படுத்தியது. இது தொடர்பில், கணக்காய்வுக்குட்படுத்தப்படும் நடவடிக்கைகளின் இனம்காணல் மீதான விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் உரிய செயன்முறை உரிமையாளர்களுடன் அத்தகைய நடவடிக்கைகளை நேரடியாக செல்லுபடியானதாக்குவதற்கும் கணக்காய்வு எல்லையை இற்றைப்படுத்தும் போது வங்கியின் திணைக்களங்களுடன் நேருக்கு நேரான சந்திப்புக்களை உள்ளகக் கணக்காய்வு நடாத்தியது. அதற்கமைய, அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டு முறையியலொன்றை பிரயோகித்து, இற்றைப்படுத்தப்பட்ட கணக்காய்வு எல்லையைப் பயன்படுத்தி 2026ஆம் ஆண்டிற்கான இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

## ஆர்வலர் ஒத்துழைப்பு

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது அதன் தொழில்சார் தேர்ச்சியினையும் IIA இன் உலகளாவிய உள்ளகக் கணக்காய்வுத் தரநிலைகளுடன் அதன் வலுவான அணிசேர்தலையும் எடுத்துக்காட்டும் வகையில், 2025 மே மாதத்தில் நேபாள ராஷ்டிர வங்கி அலுவலர்களுக்காக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இடர்நேர்வு அடிப்படையிலான உள்ளக கணக்காய்வு தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை வசதிப்படுத்தியது.

மேலும், உள்ளக கணக்காய்வினால் வழங்கப்படும் உள்ளகக் கணக்காய்வுச் சேவையின் தரத்தினை மதிப்பிடுவதற்கு அதன் வருடாந்த உள்ளக கணக்காய்வு சேவைநாடி பின்னூட்டல் அளவீட்டினை உள்ளக கணக்காய்வு நடாத்தியதுடன் அதன் பெறுபேறுகள் கணக்காய்வுக் குழுவுக்கு தொடர்பூட்டப்பட்டன.

## தர உத்தரவாதமும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமும்

உள்ளகக் கணக்காய்வுத் தரநிலைகளுடன் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டு இணக்கத்தின் வெளிவாரி மற்றும் உள்ளக மதிப்பீடுகளையும் அதேபோன்று அதன் குறிக்கோள்களின் அடைதலையும் தொடர்ச்சியான முன்னேற்றத்தின் மேம்பாட்டையும் நோக்கிய உள்ளக கணக்காய்வின் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கான செலாற்ற அளவீடையும் உள்ளக கணக்காய்வில் தாபிக்கப்பட்ட தர உத்தரவாதம் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது உள்ளடக்குகின்றது.

உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாட்டினுள் தரத்தினை முன்னேற்றி தர உத்தரவாதம் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி, உள்ளகக் கணக்காய்வானது 2025 இல் காலாந்தர சுய மதிப்பீட்டையும் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் தற்போதைய கண்காணித்தலையும் உள்ளடக்கிய உள்ளக மதிப்பீடுகளை நடாத்தியது.